# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8081640

1. District மாவட்டம் : Madurai PS: காவல்நிலையம் V&AC Year: ஆண்டு 2023 FIR No.: மு.த.அ. எண் 06/23 Date: நாள் 30/06/23

2. (i) Act சட்டம்: PC Act 1988 Sections பிரிவுகள்: u/s 7 of PC Act
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்: 1988 as amended
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்: by PC (Amendment) Act 2018
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் Date to : நாள் வரை (1) 26.06.2023 at about 15:30 hrs.
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை (2) 29.06.2023 at about 09:00 hrs
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 30.06.23 Time : நேரம் 11:00 hrs (3) 30.06.2023 at about 08:30 hrs & at about 13:30 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 30.06.23 Time : நேரம் 11:45 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Typed Complaint

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி கிராம நிர்வாக அலுவலர் அலுவலகம், தொண்டைமான்பட்டி, வாடிப்பட்டி தாலுகா, மதுரை மாவட்டம், வடமேற்கு சுமார் 30kms
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் M. வெங்கடேஷ் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் மூக்கன்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 37/23 (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் ஆடு உழவன் (g) Address : முகவரி காலனி தெரு, தொண்டைமான்பட்டி, வாடிப்பட்டி தாலுகா, மதுரை மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
திருமதி சாந்தா, பிர்கா சர்வேயர், பாலமேடு பிர்கா, வாடிப்பட்டி தாலுகா

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாள் இணைக்கப்பட்டது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..........................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .......................... பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ........................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

30/6/2023

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

Name: பெயர் [illegible]
Rank: நிலை Inspector No. எண் ..........
V X A C
Madurai
30.06.23

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
30.06.23 | 15:35

<u>பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது,</u>

இன்று 30.06.2023-ஆம் தேதி பகல் சுமார் 14.00 மணிக்கு மதுரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் நான் அலுவலில் இருந்த போது, மதுரை மாவட்டம் வாடிப்பட்டி வட்டம், சேந்தமங்கலம், கிழக்குதெருவைச் சேர்ந்த மூக்கன் மகன் திரு.M.செந்தில் என்பவர் நிலையம் ஆஜராகி தமிழில் தட்டச்சு செய்யப்பட்ட புகார் மனுவை கொடுத்தார். அதன் விபரம் பின்வருமாறு: அனுப்புநர் : M.செந்தில், த/பெ. மூக்கன், கிழக்கு தெரு, சேந்தமங்கலம், வாடிப்பட்டி தாலுகா, மதுரை மாவட்டம். பெறுநர் : காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, மதுரை. ஐயா, நான் சேந்தமங்கலத்தில் எனது குடும்பத்தினருடன் குடியிருந்து வருகிறேன். எனது மனைவியின் பெயர் இந்திரா. எங்களுக்கு இரண்டு குழந்தைகள் உள்ளார்கள். நான் பத்தாம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் சேந்தமங்கலம் கிராமத்தின் 5வது வார்டு உறுப்பினராக உள்ளேன். எனது மாமனாரின் பெயர் திரு.V.சிங்காரம் ஆகும். அவருக்கு சேந்தமங்கலத்தில் சுமார் 4 ஏக்கர் புஞ்சை நிலம் இருந்தது. அதன் UDR Survey No.65/2B1 ஆகும். அதற்கான பட்டா எண்.1065 ஆகும். அதனை தனது இரண்டாவது மனைவி திருமதி.பிரியா அவர்களுக்கு கொடுத்துவிட்டார். திரு.சிங்காரம் அவர்கள் கடந்த 2012ம் ஆண்டு காலமாகிவிட்டார். பிறகு அனைவரின் சம்மதத்துடன் மேற்படி நிலத்தை எங்களுக்குள் பாக பிரிவினை செய்த பிரித்து எடுத்துக்கொள்வது என முடிவு செய்யப்பட்டது. நான் எனது மனைவியின் உடன்பிறந்த அண்ணன் திரு.கண்ணன் என்பவரிடம் மேற்படி நிலத்தில் அவருக்கு பங்காக வந்த சொந்தமான 60 செண்ட் இடத்தை விலைக்கு வாங்கி அதனை எனது மனைவி பெயரில் கடந்த 12.05.2023ம் தேதி அலங்காநல்லூர் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.2291/2023-ன் படி பதிவு செய்தேன். மேலும் மேற்படி சர்வே எண்ணில் உள்ள மீதி நிலத்தினை எனது மனைவி மற்றும் அவரது சகோதரர்கள் கண்ணன், மணிகண்டன், சகோதிரி சொக்கம்மாள் மற்றும் எனது மனைவியின் சித்தி திருமதி.பிரியா ஆகியோர்களுக்கு பாகபிரிவினை செய்துகொண்டதன் பேரில் எனது மனைவிக்கு அதில் கிடைக்க பெற்ற 20 செண்ட் இடத்தை மேற்படி சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.2292/2023-ன் படியும் அன்றைய தினத்திலேயே பதிவு செய்தோம். பிறகு இரண்டு வாரத்திற்கு முன்பு எனது மனைவியின் அக்கா திருமதி.சொக்கமாளின் கணவர் திரு.சேகர் அவர்களை சேந்தமங்கலம் VAO திருமதி.பானுமதி நேரில் அழைத்து எங்களது பட்டா உட்பிரிவு மாறுதலுக்கான

ஆவணங்களை எடுத்து வர கூறியுள்ளார். அதற்கான ஆவணங்களை கொடுப்பதற்கு முன்பே பாலமேடு பிர்கா சர்வேயர் திருமதி.சந்திரா மற்றும் VAO திருமதி.பானுமதி ஆகியோர் கடந்த 24.06.2023ம் தேதி மாலை சுமார் 04.00 மணிக்கு எங்களது நிலத்திற்கு வந்து அதனை பார்வையிட்டார்கள். அப்போது எனது மனைவி திருமதி.இந்திரா, அவரது சகோதரர்கள் மற்றும் எனது மனைவியின் அக்கா சொக்கம்மாள் மற்றும் அவரது கணவர் திரு.சேகர் ஆகியோர் இருந்தார்கள். அந்த சமயத்தில் திருமதி.சந்திரா அவர்கள் திரு.சேகரிடம் எங்களது நிலத்தை உட்பிரிவு செய்வதற்கு நிலத்திற்கான ஆவணங்களை எடுத்து கொண்டு வந்து அவரை சேந்தமங்கலத்தில் VAO அலுவலகத்தில் சந்திக்கும்படி கூறிவிட்டு சென்று விட்டார்கள். இத்தகவலை சேகர் அவர்கள் என்னிடம் தெரிவித்துவிட்டு பாலமேடு பிர்கா சர்வேயர் திருமதி.சந்திரா அவர்களின் கைப்பேசி எண்ணை எனக்கு கொடுத்தார். பின்னர் 28.06.2023-ம் தேதி மதியம் சுமார் 01.55 மணியளவில் நான் எனது கைபேசி எண். 98946 38050 என்ற எண்ணிலிருந்து சர்வேயர் திருமதி.சந்திரா அவர்களின் கைபேசி எண் 87543 17201 என்ற எண்ணிற்கு தொடர்பு கொண்டு அவர்களிடம் என்னை அறிமுகபடுத்திக்கொண்டு எனது மனைவியின் பெயரில் பதிவு செய்யப்பட்ட நிலத்திற்கு இரண்டு உட்பிரிவு பட்டா வழங்க வேண்டி கேட்ட போது அவர் ஏற்கனவே சேகரிடம் கூறியபடி நிலத்திற்குரிய ஆவணங்களை கொண்டுவந்து தன்னை கொண்டையன்பட்டி VAO அலுவலகத்தில் சந்திக்கும்படி கூறினார். அதன்படி நான் அன்று மதியம் சுமார் 03.30 மணியளவில் கொண்டையன்பட்டி VAO அலுவலகத்திற்கு சென்று அங்கிருந்த சர்வேயர் திருமதி.சந்திரா அவர்களிடம் எங்களது நிலத்திற்கான அலங்காநல்லூர் சார்பதிவாளர் அலுவலக பத்திர ஆவண எண்கள். 2291/2023 மற்றும் 2292/2023 ஆகியவற்றின் நகல்களை கொடுத்தேன். அவர் அதனை பெற்றுக் கொண்டு, நான் உங்களுக்கான இடத்தினை பார்வையிட்டுவிட்டேன். மேலும் உட்பிரிவு செய்து எனது பரிந்துரையை அனுப்பி இரண்டு பட்டா உங்கள் மனைவியின் பெயரிலேயே கிடைக்க ஏற்பாடு செய்து தருகிறேன் என்று கூறி தனது செலவிற்கு பணம் ரூ.10,000/- கொண்டு வந்திருக்கிறீர்களா என்று கேட்டார். அதற்கு நான் பணம் ஏதும் கொண்டு வரவில்லை, உட்பிரிவு செய்து பட்டா வாங்குவதற்கு மேலும் அரசாங்கத்திற்கு பணம் ஏதும் கட்ட வேண்டுமா என்று கேட்டேன். அதற்கு அவர் அரசாங்கத்திற்கு பணம் ஏதும் கட்ட தேவையில்லை, எனது செலவிற்கு ஒரு பட்டாவிற்கு ரூ.5000/- வீதம் மொத்தம் இரண்டு பட்டாவிற்கு ரூ.10,000/- வேண்டும் என கேட்டார். நான் அவரிடம், பணம் வாங்காமல் பட்டா மாற்றி தர முடியாதா என கேட்டேன்.

அதற்கு அவர், தனக்கு பணம் ரூ.10,000/- கொடுத்தால்தான் உட்பிரிவு செய்து பட்டா வழங்க ஏற்பாடுகள் செய்ய முடியும் இல்லையென்றால் நீங்கள் அலைந்து கொண்டிருக்க வேண்டியது தான் என கூறினார். நான் அவரிடம் சரி ஏற்பாடு செய்து வருகிறேன் என்று கூறி வந்துவிட்டேன். இத்தகவலை எனது மனைவி இந்திராவிடம் தெரிவித்தேன், இலஞ்சம் கேட்டது சம்பந்தமாக வருத்தப்பட்டார். நான் பணம் புரட்ட முயன்றேன், முடியவில்லை. பிறகு கடந்த 29.06.2023-ம் தேதி காலை சுமார் 08.15 மணிக்கு எனது கைபேசிக்கு அவரது கைபேசியிலிருந்து அழைத்தார்கள். நான் வேறு வேலையாக இருந்ததால் அதனை கவனிக்க தவறிவிட்டேன். பிறகு அவர்கள் அன்றையதினமே மீண்டும் காலை சுமார் 09.00 மணிக்கு எனது கைபேசிக்கு அவரது கைபேசியிலிருந்து தொடர்பு கொண்டு என்னிடம், ஏன் உட்பிரிவு பட்டா பெறுவதற்காக தரவேண்டிய நான் கேட்ட பணம் கொண்டு வரவில்லையா என்று கேட்டார். நான் பணம் தற்போது என்னிடத்தில் இல்லை, பணத்தை புரட்டி கொண்டிருக்கிறேன் எனக் கூறினேன். அதற்கு திருமதி.சந்திரா அவர்கள் என்னிடம் பணத்தை தயார் செய்துவிட்டு நாளை (30.06.2023 தேதி) தனக்கு போன் செய்துவிட்டு தன்னிடம் வந்து தான் கேட்ட பணத்தை கொடுத்தால் தான் உடனே உனக்கு உட்பிரிவு செய்து பட்டா கிடைக்க ஏற்பாடு செய்வேன் என்று கூறி வைத்துவிட்டார். பின்பு இன்று 30.06.2023-ம் தேதி காலை சுமார் 08.30 மணியளவில் திருமதி.சந்திரா அவர்கள் என்னை அவரது கைபேசியில் இருந்து எனது கைபேசிக்கு தொடர்பு கொண்டு நான் கேட்ட பணம் ரூ.10,000/- எப்போ கொண்டு வருவாய் என கேட்டார். நான் சீக்கிரம் ஏற்பாடு செய்துவிட்டு வருகிறேன் என்று கூறினேன். அதற்கு அவர் இன்றே சீக்கிரம் கொண்டு வா, வரும்போது எனக்கு போன்செய்துவிட்டு வா என்று கூறினார். பின்னர் இன்று சுமார் 01.30 மணியளவில் என்து கைப்பேசியிலிருந்து திருமதி.சந்திரா அவர்களின் கைப்பேசிக்கு தொடர்பு கொண்டு பணத்தை குறைத்து கேட்கலாம் என்று தெடர்பு கொண்டபோது, அவர் என்னிடம் எத்தனை மணி ஆனாலும் பராவாயில்லை தான் கேட்ட பணம் ரூ.10,000/-த்தை ஏற்பாடு செய்துவிட்டு, தனக்கு போன் செய்து தான் இருக்கும் இடத்தை தெரிந்து கொண்டு அவரிடம் வந்து இலஞ்சப்பணத்தை கொடுத்தால் உடனடியாக எனது மனைவியின் பெயருக்கு உட்பிரிவு செய்து பட்டாக்கள் கிடைக்க ஏற்பாடு செய்து விடுகிறேன் என்றும், மேலும் வரும்போது எனது மனைவியின் ஆதார் அட்டையின் நகலை கொண்டுவரும்படி கூறி வைத்துவிட்டார். அரசு வேலையை செய்து முடிக்க இலஞ்சமாக பணம் ரூ.10,000/- கொடுக்க எனக்கு விருப்பமில்லை. எனவே என்னிடம் இலஞ்சம் கேட்கும் சர்வேயர்

திருமதி.சந்திரா அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க இந்த புகார் மனுவை தயாரித்து, இத்துடன் அலங்காநல்லூர் சார்பதிவாளர் அலுவலக பத்திர ஆவண எண்கள். 2291/2023 மற்றும் 2292/2023 ஆகியவற்றின் நகல்களை இணைத்துள்ளேன். மேலும், திருமதி.சந்திரா அவர்கள் கேட்ட இலஞ்சப் பணம் ரூ.10,000/-த்துடன் எனது மனைவியின் ஆதார் அட்டையின் நகலை கொண்டுவந்துள்ளேன். இப்படிக்கு (ஒ-ம்) XXXXXX (மூ.செந்தில்), 30.06.2023.

**Sir, Received the typed complaint on 30.06.2023 at 14.00 hrs, the genuineness of the complainant was verified through sources and found to be genuine and the integrity and antecedents of the accused were also verified through sources and found to be bad. I have obtained permission from the Superintendent of Police, Southern Range, Vigilance and Anti Corruption wing, Chennai and I registered a case in Madurai Vigilance and Anti Corruption Cr. No. 06/2023 u/s 7 of PC Act 1988 as amended by Prevention of Corruption (Amendment) Act 2018 at 14.45 hrs and took up investigation. Sd./-XXXXXX (P.M. Ramesh Prabhu) 30.06.2023, Inspector of Police, V&AC, Madurai.**

**Original FIR along with original typed complaint of Tr. M. Senthil, S/o. Mookkan, East Street, Senthamangalam, Vadipatti Taluk, Madurai District along with Photo copies of complainant's wife Aadhar Card, Document No.2291/2023 and 2292/2023 of Alanganallur Sub-Registrar Office are herewith enclosed and submitted to the Hon'ble Special Judge, Special Court for Trial of cases under Prevention of Corruption Act, Madurai and copy of F.I.R. is submitted to the Director of Vigilance & Anti-Corruption, Chennai.**

**(P.M. Ramesh Prabhu)**
**Inspector of Police,**
**Vigilance & Anti-Corruption,**
**Madurai.**
30.06.23